RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21311

# இடைக்கால இலக்கியத்தில் தனிப்பாடல் திரட்டு குறித்த ஆய்வின் மூலம் அறியப்படும் செய்திகள்

**த. ஷீபா [அ, *], த. பிரவீண் சாம் [அ]**

[அ] ஆங்கிலத்துறை, எஸ்.எஸ்.என் பொறியியல் கல்லூரி, காலவாக்கம், சென்னை-603110, தமிழ்நாடு, இந்தியா.

# Literary Interpretations based on the studies on Occasional Verses of the Medieval Period

**T. Sheeba [a,*], D. Praveen Sam [a]**

[a] Department of English, SSN College of Engineering, Kalavakkam, Chennai-603110, Tamil Nadu, India.

* Corresponding Author: sheebasrini2014@gmail.com

Received: 10-06-2021
Revised: 14-07-2021
Accepted: 16-07-2021
Published: 23-07-2021

Check for updates

**ABSTRACT**

Poets recreate their innermost feelings in the minds of the readers through their poems. In addition, the vast majority of occasional verses sung on poets' own emotions. They are therefore classified as autobiographical poems. In these songs, poets not only write about the beauty of nature but also about their experiences of life and the literary world. Literature composed of pleasure, humour, carefree contentment, and the emotions of fear, sadness, anxiety, pain, rivalry, jealousy, frustration, and struggle are largely discussed in the occasional verses of medieval literature. The role of literature in the sociological and psychological analysis of the everyday life problems of poets becomes an integral part of their themes. How do the problems that this society affect the soul of an individual? In it, one can learn from the literature of the time. The success of the creators is that they create the best literature related to human life. Further, the uniqueness and personality of a poet are known by the excellence of his or her conceptual style. This article studies the verses that have been excluded from the history of Tamil literature, and known as the "Occasional Verses Collection (Single Anthology)".

**Keywords:** Single Anthology, Tamil literature, Medieval literature, Tamil Poets, Ottakoothar, Avvaiyar, Kambar.

## ஆசிரியர்கள் குறிப்பு



**முனைவர் த. ஷீபா**, எம்.ஏ, எம்.எட். பிஎச்.டி அவர்கள் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக கல்வி பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இவர் தனது முதுகலை படிப்பை சென்னை பல்கலைக்கழகத்தில் முடித்து, தனது முனைவர் பட்டத்தினை பெரியார் பல்கலைக்கழகத்தில் பெற்றார். இவர் எட்டு ஆய்வு கட்டுரைகளை பன்னாட்டு ஆய்விதழ்களில் கட்டுரையை வெளியிட்டுள்ளார். ஐந்து பன்னாட்டு கருத்தரங்கங்களில் தனது ஆய்வு கட்டுரைகளை சமர்பித்துள்ளார். இடைகால இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடுகொண்ட இவர் தற்போது எஸ்.எஸ்.என். கல்வி நிறுவனத்தில் முனைவர்பட்ட மேலாய்வை (Post Doctoral Fellow) பின்நவீனத்துவ கோட்பாட்டில் செய்து வருகிறார்.



**முனைவர். த. பிரவீண் சாம்,** எம்.ஏ. எம்.பில், பி.எச்டி, அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலத் துறை பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் தற்போது எஸ்.எஸ்.என் பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவரிடம் ஐந்து பேர் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இவர் எழுதிய புத்தகங்கள் பல பல்கலைக்கழக பாடத்திட்டங்களில் இடம்பெற்றுள்ளன. பத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை இதுவரை வெளியிட்டுள்ளார். ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் பல கருத்தரங்கங்களை சீரும் சிறப்புமாக நடத்தி இருக்கிறார். இவருடைய கல்வி பணிக்காக பல விருதுகளை பெற்றுள்ளார். தற்பொழுது தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றார்.

## முன்னுரை

நம் தமிழின் பெருமையையும், அற வாழ்க்கை மேற்கொண்ட தமிழர்களின் புகழையும் உலகிற்குத் தெரிவித்து அவற்றை வரலாற்றில் நிலைநிறுத்திய பெருமை அக்காலச் சங்க இலக்கியங்களுக்கே உண்டு. சீரும் சிறப்புமிக்கத் தனித்தன்மை வாய்ந்த தமிழ் இலக்கியத்தில் முதலாவதாக திகழும் சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையானவை தனிப்பாடல்களாகவே திகழ்கின்றன. தமிழ் இலக்கியங்களை பொருத்தமட்டில், தனிப்பாடலானது பொதுச் சொல்லாயினும், சிறப்புச் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நம் தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து உற்று நோக்கில், தொடக்கக் காலத்தில், செய்யுள் வடிவங்களானது, தனிப் பாடல்களாகத் தோன்றி, பின் தொடர்பாடல்களாக வளர்ச்சி பெற்றன. சங்கப்பாடல்கள் தனிப்பாடல்களாகவே இருந்தாலும் அவை சில இலக்கண இலக்கிய வரையறைக்கு உட்பட்டே படைக்கப்பட்டிருக்கின்றன (Subramaniya Pillai, 2008).

தனிப்பாடல்களாகவே சில இலக்கியங்கள் படைக்கப்பெற்றும், சில இலக்கிய இலக்கண வரையறைகளின் கீழ் அவைகள் தொகுக்கப்பெற்று, அவைகள் சங்க இலக்கியங்கள் எனப் பெயர்ப் பெற்றபின்பு, தனிப்பாடல்கள் என்ற உண்மைத்தன்மை மறைந்து ஒருங்கிணைந்த சங்கப் பாடல்களாகவே தமிழறிஞர்கள் இடையே காட்சி அளித்தும், கருதப்பட்டும் வந்தன. ஆனால், தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பிடித்த பக்தி இலக்கியக் காலத்தைத் தொடர்ந்து பிற்காலப்புலவர்கள் அகம், புறம், அறம், பக்தி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு, அவர்களின் தனிப்பட்ட உள்ளப் போக்குகளை. அவர்களின் பாடல்களிலே வடித்தன. அதாவது அவர்கள் எதிர்கொண்ட அவலம், பெருமிதம், வசை, புகழ்ச்சி, இகழ்ச்சி, ஏற்றம் இறக்கம் கொண்ட ஓசை, சொல் விளையாட்டு ஆகியவைகள் உள்ளடக்கிய சுவைமிக்க பாடல்கள் பலவற்றைப் படைத்தனர். அவையே பிற்காலத்தில் தனிப்பாடல் திரட்டு என்று தொகுக்கப்பட்டது. இவை 10-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரையிலான கால அளவை உள்ளடக்கியதாக சில வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டாலும், கி.பி 12 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இயற்றப்பட்ட பாடல்களே தனிப்பாடல் திரட்டு என்னும் தொகுப்பில் உள்ளடக்கம் கொள்கின்றது. இவை தனிப்பாசுரத் தொகை, தனிப்பாடல்கள், தனிப்பாமாலை, தனிச்செய்யுள் சிந்தாமணி என்ற பெயர்களில் தொகுக்கப்பெற்றும் அப்பொதுப்பெயரைத் தாண்டி, வேறெந்த ஒரு சிறப்புப் பெயரையும் பெறாது வழங்கப்படுகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றை உற்றுப்பார்க்கையில், படைப்புகளுக்கு அப்படைப்பாளி இட்ட பெயரினைக் காட்டிலும், மக்கள் பயன்பாட்டில் இயல்பாக அழைக்கும் பெயரே நிலைப் பெற்றுவிடுகிறது. ஆயினும், மெத்தத்தமிழ் பயின்ற தமிழ் அறிஞர்கள் மத்தியில் மட்டுமே பேசப்படுகின்ற, எழுதப்படுகின்ற பாடல்களாக மட்டுமே தனிப்பாடல்கள், இன்று வரை திகழ்கிறது (Tamilpriyan, 2013; Tamilpriyan, 2013a). கடந்த நூற்றாண்டில் பல ஆசிரியர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதி உள்ளனர். ஆனால் அவர்கள் "தனிப்பாடல்களுக்காக எந்தவித முறையிலும், அதாவது காலமுறையிலும், கருத்து முறையிலும் கூட இடம் ஒதுக்காமல் அறவே தவிர்த்து வருவது" மிகவும் ஆச்சர்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

## தனிப்பாடல் திரட்டு உருவான விதம்

தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ள பாக்களை மட்டுமே அடிப்படையாக கொண்டு அவற்றை இயற்றியப் புலவர்களின் வரலாறுகளை நாம் சிறிதளவு அறிந்துக்கொள்ளமுடிகிறது. தனிப்பாடல் திரட்டு உருவாவதற்கு முன்னரே "புறத்திரட்டு" என்ற ஒரு நூல் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றி இருக்கலாம் என்பது வரலாற்று ஆசிரியர், பேரா. வையாபுரிப் பிள்ளை அவர்களின் கூற்றாகும். இதே போன்று, "புறத்திரட்டு சுருக்கம்", "தமிழ் நாவலர் சரிதை" போன்ற நூல்கள் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே தனிப்பாடல்களின் தொகுப்பாக உருவாகி இருக்கலாம் என்றும் அவற்றில் காளமேகம், ஔவையார், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களின் தனிப்பாடல்கள் பாடல்கள் உள்ளதாகவும் வரலாறு கூறுகின்றன. மேலும், பாண்டித்துரைத் தேவர் அவர்களால் வெளியிடப்பட்ட "பன்னூல் திரட்டு", தமிழ்நாடு அரசுக் கையெழுத்துச் சுவடி நூல் நிலையத்தில் உள்ள "சின்னூல் திரட்டு" "பன்னூற்பா" போன்ற நூல்களும் தனிப்பாடல்களின் தொகுப்பாகவே கருதப்படுகின்றன. ஆனாலும், தற்பொழுது நடைமுறையில் உள்ள தனிப்பாடல் திரட்டு மூலமானது, பொன்னுசாமி தேவர் கேட்டுக்கொண்டதின் பேரில், தில்லையூர் சந்திரசேகரக் கவிராயர் அவர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டவை ஆகும். இத்தொகுப்பில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட 1291 தனிப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு தொகுக்கப்பட்ட தொகுப்பிற்கு பிற்காலத்தில் பல பேராசிரியர்களால் உரை எழுதப்பட்டன. தனிபாடல்களின் எண்ணிக்கை தொகுக்கப்பட்ட பேராசிரியர்களைப் பொருத்து வேறுபடவே செய்கின்றன. உதரணமாக, கா.சுப்பிரமணியப் பிள்ளையின் உரையுடன் இரண்டு பாகங்களாக வெளிவந்த தனிப்பாடல் திரட்டு 1, 2 ஆகியவற்றில் உள்ள மொத்தத் தனிப்பாடல்களின் எண்ணிக்கை 1302 ஆகும். அதேபோல அவற்றை இயற்றியப் புலவர்களின் எண்ணிக்கையும் 91 லிருந்து 97 வரை வேறுபடுகின்றன. ஆகையால், தமிழ் பேராசிரியர்களால் மற்ற செவ்விலக்கியங்களுக்கு எழுதப்படுகின்ற இலக்கிய வரலாறு போன்று, தனிப்பாடல் பதிப்புகளுக்கும் இலக்கிய வரலாறு எழுத முடியும் என்பது திண்ணம்.

## தனிப்பாடல் புலவர்கள்

இடைக்கால இலக்கியத்தில் பக்தி இலக்கிய காலத்தை தொடர்ந்து புலவர்கள் பலர் பல்வேறு வியக்கத்தக்க உத்திகளைப் பயன்படுத்தி பல தனிப்பாடல்களை படைத்துள்ளனர். கிட்டத்தட்ட 90-க்கும் மேற்பட்ட புலவர்கள், அவர்கள் காலத்தில் பாடிய தனிப்பாடல்கள் "தனிப்பாடல் திரட்டில்" தொகுக்கப்பட்டுள்ளன. அப்பாடல்களில் அவர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளை இலக்கியத் தரத்தோடும் கவிதை நயத்தோடும் வெளிப்படுத்தியுள்ளனர். கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்களால் உரையுடன் கூடிய புத்தகங்களாக தனிப்பாடல் திரட்டு 1, 2 என இரண்டு பாகங்களாக1939-ல் சென்னை பி. இரத்தின நாயக்கர் சன்ஸ் பதிப்பகத்தார் அவர்களால் வெளியிட்ட நூல்களை மீண்டும் சாந்தா பதிப்பகத்தார் 2008 ல் வெளியிட்டனர். இதில் முதல் பாகத்தில் 37 புலவர்களின் பாடல்களும், இரண்டாம் பாகத்தில் பெயர் குறிப்பிட்ட 54 புலவர்களின் பாடல்களும், பல வித்துவான்கள் என்ற தலைப்பின் கீழ் பல பாடல்களும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக ஒட்டக்கூத்தரின் பாடல்கள் பிரிவிலேயே புகழேந்திப் புலவரின் பாடல்களும், கம்பரின் பிரிவிலேயே அம்பிகாபதியின் பாடல்களும் என 96 புலவர்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளனர் தனிப்பாடல்கள் என்ற உடன் மிகுந்து கூறப்படுபவர்கள், காளமேகப் புலவர், ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் ஆகியப் புலவர்களே. இவர்களில் ஔவையார் குறித்த தெளிந்தக் கால வரலாறு வரையறைச் செய்யப்படாமலே பயின்றுவரப்படுகின்றது. தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் காளமேகப் புலவரின் பாடல்களே மிகுதியாக திகழ்கின்றன (Kanniyappan, 2016).

## இடைக்கால இலக்கியமும் தனிப்பாடல்களும்

இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் ஆகச்சிறந்த அழகிய கண்ணாடி ஆகும். எந்தவிதமான இலக்கியமும், அவ்வக்கால மனித சமுதாயத்தின் பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல் நம்பிக்கைகள், வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்ள உதவும் ஓர் உன்னத பொக்கிசமாக விளங்குகிறது.

தமிழிலக்கியம் உலக வரலாற்று இலக்கியங்களுடன் ஒப்பிடும் அளவிற்குக் கருத்துவளமும், கற்பனைத்திறனும் கொண்டது. இலக்கியம் மனித வாழ்க்கையைமையமாகக் கொண்டே படைக்கப்பட்டாலும் படைப்பாளியின் மனநிலையைச் சார்ந்தே அது அமைகிறது (Kanthasamy, 2004; Kanakarathinam, 2014). இது மனிதனின் சிந்தனைக்கும், உணர்வுக்கும், கற்பனைக்கும் இடையே ஒரு பாலமாக அமைவதோடு மனிதனின் மொழியோடும் அன்றாட வாழ்க்கையோடும் தொடர்புடையது. கற்பவரின் எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. இலக்கியத்தின் தரமும், சுவையும் காலந்தோறும் உருமாற்றம் பெற்றுக்கொண்டே இருக்கிறது. மக்களின் பண்பாடு, கலாச்சாரம், சமுதாயப் பழக்கவழக்கங்கள், பல்வேறு நம்பிக்கைகள் போன்றவற்றை எடுத்துரைக்கிறது. மனிதவாழ்வில் ஏற்படும் மாறுதல்கள் எனக் காலந்தோறும் ஏற்படும் புதிய மாற்றங்களைச் சந்திக்க சமுதாயத்தின் சூழல்களுக்கேற்ப இலக்கியப் படைப்புகளும் படைப்பாக்கப் பொருள்களும் மாறிக்கொண்டே இருந்தன. இதன் விளைவாக புதுப்புது வகையான இலக்கிய படைப்புகளையும் புலவர்கள் படைத்துக்கொண்டே இருந்தார்கள். அவ்வாறு தோன்றிய தமிழ் இலக்கியங்களை மூன்று காலக்கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளாவன, சங்க கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், நவீனக்கால (இக்கால) இலக்கியம் என்பதாகும். காப்பியக் காலத்திற்குப் பின் இலக்கியப் படைப்புகளில் பக்திமணம் வீசியது. அத்தோடு தனிப்பாடல்களும் வீறுகொண்டு எழுச்சிப் பெற்றன (Arunachalam & Varatharaja, 2012). இடைக்காலத்தின் தொடக்கத்தில் இறையருளில் மூழ்கிக் கடவுளின் முழுமையான வல்லமையைப் போற்றிப் போற்றி மனமுருகிப் பாடப்பட்டது. பிறகு சிற்றிலக்கியங்களும் தனிப்பாடல்களும் தனித்துவமாக தழைத்தோங்கி வளர்ந்தன. தனிப்பாடல்களைப் பாடியப் புலவர்களில் சிலர் கடவுளுக்கு எதிர்நிலையில் இருந்து அறைக்கூவல் இட்டனர். உதாரணத்திற்கு, இராமச்சந்திரக் கவிராயர் அவர்களின் கீழ்க்காணும் பாடல்வரிகளை கூறலாம் (Sheeba & Karthikeyan, 2020).

"வணகம்வரும் சிலநேரம் குமர கண்ட
வலிப்புவரும் சிலநேரம் வலியச் செய்யக்
கணக்குவரும் சிலநேரம் வேட்டை நாய்போல்......"

## தனிப்பாடல் திரட்டில் பக்தி இலக்கியப் புலவர்கள்

இடைக்கால இலக்கியத்தில் பக்தி இலக்கியங்களே முதன்மை இலக்கியங்களாக தழைத்தோங்கி நிற்கின்றன. இவ்விலக்கியங்களை இயற்றிய புலவர்களின் வாழ்க்கையானது அவர்கள் இயற்றிய பாடல்களின் வளமைக்கு நேர் எதிராக வலியும் வேதனையும் நிறைந்த ஒன்று. அத்தகைய அவர்களின் போராட்டமிக்க வாழ்கையில் அவ்வப்போது நடந்த நிகழ்வுகள் அவர்கள் இயற்றிய பாடல்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன (Veerapathiran, 2020). இக்காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட இப்பக்தி இலக்கியத்திலும் நாயன்மார்களால் இயற்றப்பட்ட பெரும்புகழ்மிக்க சைவ இலக்கியங்களுக்கு சரிநிகராக, ஆழ்வார்களால் வைணவம் சார்ந்த இலக்கியங்கள் வளர்க்கப்பட்டன. தனிப்பாடல் திரட்டு என்னும் நூல் தொகுக்கும் பொழுது, பக்தி இலக்கியக் காலத்தில் பாடப்பட்ட தனிப்பாடல்களையும் கருத்தில்கொண்டு பொய்கையாழ்வார், 2. பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார், 4. திருமழிசையாழ்வார், 5. திருமங்கையாழ்வார் என மொத்தம் ஐந்து ஆழ்வார்களும், திருஞானசம்பந்த மூர்த்தி அவர்களையும் தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்ற புலவர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதை அறிகிறோம் (Subramaniyan, 2014).

## போட்டியிலும் போற்றல்

காலம் காலாமாக, அவ்வக்காலத்தில் வாழும் புலவர்களிடையே போட்டி பொறாமைகள் தற்செயலாகவோ, சூழ்நிலைகளால் தூண்டப்பட்டோ அரங்கேறி வந்தன. அது போலத்தான் திருமங்கையாழ்வார் மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோர் இடையே ஒரு போட்டி உருவாகிறது15.

அந்த போட்டியிலே இழித்தும் பழித்தும் பேசாமல் திருமங்கையாழ்வார் பற்றி திருஞானசம்பந்தர் கீழ்க்கண்டவாறு போற்றிப் பாடுகிறார் (Manikkam, 1977).

“கடியுண்ட நெடுவாளை கறாவில் தப்பக்

கயத்துக்குள் அடங்காமல் விசும்பில் பாய

அடியுண்ட தெங்கின் பழத்தால் காயம்

அலையுண்டு குலைசிதறும் ஆலிநாடா

படியுண்ட பெருமானைப் பறித்துப்பாடிப்

பதம்பெற்ற பெருமாளே கவியேன் பெற்ற

கொடியொன்று நின்பவனிக்கெதிரே சென்று

விட்டாள் உயிரொன்று கொண்டு வந்தாளே”

மேற்காணும் “தனிப்பாடல் திரட்டு” நூலில் இடம் பெற்ற பாடல் மூலம் திருமங்கையாழ்வார் எந்த அளவிற்கு தூய்மையான அருள்மிகு வாழ்க்கை வாழ்ந்தார் என்பதை அறிய முடிகிறது. அதேபோல் திருஞானசம்பந்தர் பற்றி திருமங்கையாழ்வார் கீழ்க்கண்டவாறு போற்றி புகழ்பாடும் ஒரு தனிப்பாடலை காணலாம்.

“வறுக்கை நறுங்கண்ணி சிதறிச் செந்தேன் பொங்கி

மறுக்கரையின் குளக்கரையில் மதகிலோடப்

பெருக்கெடுத்து வண்டோலம் செய்யும் காழிப்

பிள்ளையார் சம்பந்தப் பெருமாள் கேளீர்

அருட்குலாவு மயிலைதனில் அனலால் வெந்த

அங்கத்தைப் பூம்பாவை ஆக்கினோம் என்று

இருக்குமது தகவன்று நிலவால் வெந்த

இவளையும் ஓர் பெண்ணாக்கல் இயல்வு தானே”

ஆனால் இடைக்கால இலக்கியத்தில் பக்தி இலக்கியக் காலத்தை தொடர்ந்து வரும் புலவர்களின் நிலையோ அதற்கு தலைகீழாக உள்ளது. ஔவையார் கம்பர், காளமேகப்புலவர், அதிமதுர கவிராயர் ஆகியோரிடையே போற்றலை விட தூற்றலே பெரிதாக அவர்கள் பாடிய தனிபாடல்களில் தலைத்தோங்கி நிற்கின்றன என்பதை அறிகிறோம்.

## தனிப்பாடல் திரட்டு புலவர்களின் வாழ்வியல் பண்புகள்

தனிப்பாடல் திரட்டில் அறியப்படும் ஔவை மூதாட்டி அவர்கள் எதிர்கொண்ட அவமானங்கள் மற்றும் தன்மான எழுச்சிகள், கம்பர் போன்றப்புலவர்களால் அறியப்படும் ஆணாதிக்க நிலையினைத் தைரியமாக எதிர்த்து நின்ற தன்மை, நீதி, நியாயம் தவறிய சோழ மன்னனை எதிர்த்து கேள்விகேட்டு உண்மையை உணர்த்திய விதம், அன்போடு கூழே கொடுத்தாலும் போற்றி பாடல் பாடியமை போன்ற பல்வேறு பண்புகளும் ஒழுக்கநெறி சார்ந்த வாழ்வியல் முறைகளும் சிறப்பு வாய்ந்தவைகளாகும். அதே போன்று கம்பனின் வேதனையான இளமை, கவித்திறமை, சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்ட விதம், இராமாயணம் பாடச் சோழமன்னன் பணித்தது, அதற்காக ஒட்டக்கூத்தரிடம் போட்டியிட்டது, ஒட்டக்கூத்தரால் போற்றப்பட்டது, தூற்றப்பட்டது, சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டது, தனது மகன் அம்பிகாபதி சோழமன்னனின் மகளை காதலித்ததால் கொல்லப்பட்டது, சோழ நாட்டை விட்டே வெளியேறி பசியால் வாடியது, அடைப்பைகாரனாக சேரனிடம் வேலைக்கு சேர்ந்தது, சேர மன்னனால் ஆதரிக்கப்பட்டது, சீராமன் என்னும் ஏழை தொழிலாளியையும் போற்றப்பட்டது என, கம்பரின் பல்வேறு வாழ்வியல்

சார்ந்த செய்திகள் தற்கால மனித வாழ்வையும் செம்மைப்படுத்தும் வல்லமை வாய்ந்தவைகள். ஔவையார் மற்றும் கம்பரின் சமகாலத்துப் புலவர்களான ஒட்டக்கூத்தர் மற்றும் புகழேந்திப் புலவர் ஆகிய இருவரின் பாடல்களும் தனிப்பாடல் திரட்டில் மிக குறைவாகவே இடம் பெற்றுள்ளன. இருவருமே மிகவும் ஆற்றல் வாய்ந்த புலவர்கள். அந்த வகையில் ஒட்டக்கூத்தர் மூன்று சோழமன்னர்களின் அரசவையில் புலவராகப் பணியாற்றிய பெருமை பெற்றவர். அம்மன்னர்களின் மீது மூவருலா பாடி நன்றிக்கடன் செலுத்தியது, உடைவாள் ஏந்திய புலவர் என்ற பெயர்பெற்றது, கம்பரை சூழ்ச்சியால் வீழ்த்தியது, புகழேந்திப் புலவரிடம் பகைமை பாராட்டியது, காலப்போக்கில் பாண்டிய மன்னன் தன் மகளைச் சோழமன்னனுக்கு மணமுடித்துத் தந்தபோது புகழேந்திப் புலவரையும் சீதனமாக வழங்கிய அரிய நிகழ்வு; ஒட்டக்கூத்தர் மற்றும் புகழேந்திப் புலவரிடையே ஏற்பட்ட மோதல் போக்கு; இரட்டைத் தாழ்ப்பாள் பெயர்பெற்ற விதம் போன்ற பல்வேறு செய்திகள் இலக்கிய வளமைக்கு வலு சேர்க்கின்றன. வரதன் என்ற இயற்பெயர் பெற்ற காளமேகப்புலவர், எவ்வாறு காளமேகம் ஆனார் என்பதும், அவருடைய இளமைக்கால நிகழ்வுகள், மோகனாங்கியிடம் கொண்டக் காதலுக்காகத் தன் சமயத்தையே மாற்றிக்கொண்டது, ஊர் ஊராகப் பாடச்சென்றது, திருமலைராயன் என்னும் மன்னனிடம் பாட்டுபாடி முத்துமாலை வாங்கி வரச்சொல்லி மோகனாங்கி பணிக்கப்பட்டது, அதற்காக அம்மன்னனை நாடிய பொழுது அங்கு தண்டிகை புலவர்களால் ஏற்பட்ட தடைகள், அவமானங்கள், அதிமதுரக் கவிராயரை எமகண்டம் பாடி வீழ்த்தியது, திருமலைராயன் பரிசு தரமால் ஏமாற்றியதால் கோபம் கொண்டு சாபமிட்டது, தன் காதல் மனைவி மோகனாங்கி இடமே வந்து இல்லற வாழ்வை மேற்கொண்டு வறுமையில் வாடியது என பல செய்திகள் அவர் இயற்றிய தனிப்பாடல்கள் வாயிலாக அறியலாம். தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்ற புலவர்களில் இறுதியாக எடுத்துக் கொள்ளப்பட்டவர்களில், துன்பத்தையும் நகைச்சுவையுடன் பாடலாக இயற்றும் வல்லமைக்கொண்ட இராமச்சந்திரக் கவிராயர் மற்றும் மதுரகவிராயர் ஆவர். இராமச்சந்திரக் கவிராயரைப் பொறுத்தமட்டில் இறைவனிடமே இறைவனுக்கு எதிர்நிலையில் நின்று பாட்டுப்படியவர். என்னை ஏன்தான் படைத்தாய் என்று ஆவேசத்துடன் கேள்வி எழுப்பியர். வயிற்றுப் பிழைப்பிற்காகப் பொய்யையும், போலியையும் மனசாட்சிக்கு எதிராகப் பேசியும் பாட்டுப் பாடியும் தான் என் வாழ்க்கையை வாழ வேண்டுமா என்று வேதனைக்குரல் எழுப்பியவர். ஆனால் மதுரகவிராயரோ வறுமையை அழையா விருந்தாளி என எள்ளிநகையாடி காலத்தின் சீற்றத்தில் எல்லாம் மாறிப்போகும் என்ற உயர்ந்த நம்பிக்கை கொண்டு, இயற்கை மீதான பல பாடல்களை பாடி இன்பம் கொண்டவர். இப்படி பற்பல செய்திகள் தனிப்பாடல் திரட்டை உற்று நோக்கும்போது அறியப்படுகிறோம் (Kanniyappan, 2016).

## முடிவுரை

தனிப்பாடல் திரட்டு என்ற நூலுக்கு சில புலவர்கள் உரை எழுதி இருந்தாலும், தமிழ் இலக்கிய வரலாற்றில் அதற்கென்று தனி இடம் கிடைக்காமல் போனது வருந்தத்தக்க ஒன்றே. ஆனாலும், கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகப் புலவர், ஔவையார் போன்ற சில தனிப்பாடல் புலவர்களை பற்றி இலக்கிய உலகில் உள்ளவர்களுக்கு மேலோட்டமாக தெரியும் என்ற அளவில் நாம் மகிழ்ச்சி கொள்ளலாம். இக்கடுரையில், தனிப்பாடல் திரட்டு உருவான விதமும், தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ள புலவர்கள் பற்றிய அறிமுகமும், தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்று உள்ள சில இலக்கிய புலவர்களை பற்றிய செய்திகளையும் அறியப்படுகிறோம்.

## References


Arunachalam, M., Varatharaja, R., (2012) History of Tamil Literature, Arun Publication, Chennai, India.

Kanakarathinam, K., (2014) Tamil Literary News, Adon Publishing Group, Thiruvananthapuram, India

Kanniyappan, S., (2016) Thanipadal Thirattu, Mullai Nilayam, Chennai, India

Kanthasamy, S.N., (2004) History of World Tamil Literature, World Tamil Research Institute, Chennai, India

Manikkam, A., (1977) Thanipadal Thirattu, Poompuhar Publishing House, Chennai, India.

Sheeba, T., Karthikeyan M., (2020) Study on medieval scholar's Ramachandra Kavirayar and Avvaiyar lifestyle through their occasional verse, International Research Journal of Tamil, 2(1) 43-50. https://doi.org/10.34256/irjt2012

Subramaniya Pillai, K., (2008) Thani Padal Thiratu, Edition 1&2, Santha Publication, Chennai, India.

Subramaniyan, S.V., (2014) Thani Padal kalanchiyam, Meyyapan Publication, Chidambaram, India.

Tamil Priyan, (2013) History of Tamil Poetry, Aruna Publication, Chennai, India.

Tamilpriyan, (2013a) History of Tamil scholars, Aruna Publication, Chennai, India.

Veerapathiran, R., (2020) Insights on Romantic Medieval Literature, Indian Journal of Multilingual Research and Development, 1(1) 27-33. https://doi.org/10.34256/ijmrd2014

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License